**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.238/2024

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. ஜெயக்குமார் | வயது: 44 |
| த/பெ. : திரு. ராமசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி நிறுவனத்தின் அதிகார முகவர் ஆஜர். பிரதிவாதி தோன்றா தரப்பினராக உள்ளார். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவா வாதி நிறுவனத்தின் அதிகார பெற்ற முகவர் . முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 11.04.2017 – வாதி கூட்டாண்மை நிறுவனத்தின் பதிவு சான்று | ஒளி நகல் | **வா.சா.ஆ 1** |
| 01.04.2014 – வாதி நிறுவனத்தின் கூட்டாண்மை பத்திரம் | புகைப்பட நகல் | **வா.சா.ஆ 2** |
| 27.09.2023 – வாதி நிறுவனம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் | **வா.சா.ஆ 3** |
| 30.09.2023 – சட்ட அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் | **வா.சா.ஆ 4** |
| 09.03.2025 – வாதி நிறுவனம் சாட்சிக்கு நீதிமன்றத்தில் | அசல் | **வா.சா.ஆ 5** |

| | | |
|---|---|---|
| சாட்சியம் அளிக்க கொடுத்த அங்கீகார கடிதம் | | |
| 09.03.2023 – வாதி நிறுவனம் ஏற்படுத்திய தீர்மானம் | அசல் | **வா.சா.ஆ 6** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d.கே.ஆர். கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.